# திருமணத்தின் ஆட்சியும் சூழ்ச்சியும்

திருமணம் என்பது அனைவருடைய வாழ்விலும் எதிர்பார்க்கப்படும் ஒரு முக்கியமான நிகழ்ச்சியாகும். திருமணம் ஆகாதவர்கள் திருமணத்திற்காக ஏக்கம் கொள்கிறார்கள். திருமணம் ஆனவர்களில் பெரும்பாலானவர்கள், ஏன்தான் திருமணம் செய்து கொண்டோமோ என்ற மனநிலையில்தான் வாழ்கின்றனர். திருமணம் ஆனவர்கள் எல்லோரும் ஆனந்தமாக, இன்பமாக வாழ்கிறார்கள் என்று கூற முடியவில்லை. எனவே, திருமணம் பற்றிய ஒரு சிறு ஆராய்ச்சி செய்வோமாக!.

திருமணம் ஆகாத சேகர், ராமை சந்தித்த போது நடந்த உரையாடலை பார்ப்போம்.

ராம் : என்ன சேகர் எப்படி இருக்கிறாய் ?

சேகர் : நலம்தான், திருமணம் செய்து கொள்ள பெண் பார்த்து வருகிறேன். இன்னும் பெண் அமையவில்லை. அதுதான் வருத்தமாக இருக்கிறது.

ராம் : திருமணம் செய்து கொள்ள மிகவும் ஆவலுடன் இருப்பது போல தெரிகிறதே!

சேகர் : ஆமாம்.

ராம் : திருமணம் ஏன் செய்து கொள்ள விரும்புகிறாய் ?

சேகர் : இது என்ன கேள்வி ? தாம்பத்திய சுகத்தை அனுபவிப்பதற்குத்தான்.

ராம் : பெண்ணிடம் இன்பம் இருப்பதாக எனக்கு தோன்றவில்லை.

சேகர் : பெண் இன்பத்தை விட வேறு சுகம் என்ன இருக்கிறது.

ராம் : நீ பெண்களை அறிவுபூர்வமாக பார்க்கவில்லை என்று தெரிகிறது. ஆழமாக சிந்த்திதால் பெண்ணிடம் இன்பம் இல்லை என்று உனக்கு நன்கு புரியும்.

சேகர் : எப்படி பார்க்கச் சொல்கிறாய் ?

ராம் : ஒரு பெண்ணிடம் எத்தனை ஓட்டைகள் உள்ளன ?

சேகர் : ஒன்பது ஓட்டைகள் (இரண்டு கண்கள், இரண்டு காதுகள், மூக்கு துவாரங்கள் இரண்டு, வாய், பிறப்பு உறுப்பு, மலத்துவாரம்)

ராம் : இவை அனைத்தும், கழிவுகள் வரும் ஓட்டைகள் அல்லவா ? நீ இன்பத்தை எதிர்பார்க்கும் உடம்பிலிருந்து கழிவு வருவதால், அது கழிவுநீர்த் தொட்டி என்று தெரிகிறது. ஒரு கழிவு நீர்த் தொட்டி, உனக்கு மிகப்பெரிய இன்பம் தரும் என்று நினைத்துக் கொண்டு இருக்கிறாய். மேலும், உனக்கோ ஒன்பது ஓட்டைகள் தான் கண்ணுக்குத் தெரிகிறது. ஆனால் ஒரு சித்தரோ, உடம்பு முழுவதும் எண்ணிலடங்கா ஓட்டைகள், அத்தனையும் நாறுமடி என்று பாடுகிறார். அதாவது, அவர் வியர்வை வரும் வழியை குறிப்பிடுகிறார். இன்னொரு சித்தர் இதையே, உடம்பு முழுவதும் நாறும் சீழ் நிறைந்த பாண்டம் என்று குறிப்பிடுகிறார். அதாவது, உடம்பில் எந்த இடத்திலாவது காயம்

ஏற்பட்டு தோல் கிழிந்தால் அதிலிருந்து வருவது சீழ் என்று குறிப்பிடுகிறார். ஆனால், இதுதான் உனக்கு மிகப்பெரிய இன்பம் கொடுப்பதாக நினைக்கிறாய். மேலும் பல சித்தர் பாடல்களில் இது மிகத்தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. அவற்றுள் சில

பட்டினத்தார் பாடல்கள்

வாய்நாறும் ஊழல் மயிர்ச்சிக்கு நாறிடும் மையிடுங்கண்
பீ நாறும் அங்கம் பிணவெடி நாறும் பெருங்குழி வாய்ச்
சீ நாறும் யோனி அழல்நாறும் இந்திரியப் பேறு சிந்திப்
பாய்நாறும் மங்கையர்க் கோஇங்ஙனே மனம் பற்றியதே ?

சீயும் குதிச் செழுநீர் வழம்பும் செறிந்தெழுந்து
பாயும்; புடவை ஒன்றில்லாத போது பகல் இரவாய்
ஈயும் எறும்பும் புகுகின்ற யோனிக்கு இரவு பகல்
மாயும் மனிதரை மாயாமல் வைக்கமருந்தில்லையே!.

( சீயும் குதிச் செழுநீர் – மாதவிடாய் கழிவுகள் )

உண்மைப் பொருளை உகந்திருந்து பாராமல்
பெண் மயக்கத்தாலே பிறந்து இறந்தேன், பூரணமே!

பாம்பாட்டிச்சித்தர்

மலக்குடம் மீதினிலே மஞ்சள் பூச்சென்றும்
மல்கும்புழுக் கூட்டின்மேல் வண்ணத் தோலென்றும்
சலக்குழிக் குள்ளேநாற்றஞ் சார்ந்த சேறென்றும்
தானறிந்து தள்ளினோமென் றாடாய் பாம்பே.

<u>குதம்பை சித்தர் பாடல்</u>

வளர்ந்து முறுக்காய் வயதில் எழுந்த தனம்
தளர்ந்து விழுந்திடுமே குதம்பாய்
தளர்ந்து விழுந்திடுமே.

பீநாறும் உடம்பிற்கு பூவாசம்
எதுக்கடி குதம்பாய்
எதுக்கடி

இதையே ஒரு ஞானி கீழ் வருமாறு கூறுகிறார்

பூமியில் புதைத்தால் புழுக்கள் பசியாறும்
இந்த நதியில் போட்டால் மீன்கள் வயிறாறும்
இந்த நெருப்பில் வைத்தால் சுடுகாடுதான் சாம்பலாகும்
நாற்ற உடம்பின் மீது காதலா ?
சாக்கடையில் முழ்க சந்தோசமா ?
ஊத்த வாயில் முத்தம் கொடுக்க உள்ளத்துடிப்பா ?
பீளைக்கண்கள் வெட்டில் பெருமகிழ்ச்சியா ?

அக்கினிக்கு இறையாகும் ஆபாசபாண்டம்
கிடைத்தல் அரிதாம், அழகாம், அற்புதமாம்,
ஐயோ, வெந்து சாம்பலாகும் இந்த வெறும்கட்டையின் மீது காதலா ?
கண்ணுள்ளவன் காதல் செய்வானா ?

இதையே ஞானதேவர்,

ஞானியானவன், இந்திரிய விசயசுகத்தை துக்ககாரணமென்றறிந்து, அதன் வழிகூடப் போகான், –எவன் ஆத்மஸ்வரூபத்தை அறிய வில்லையோ, அவனே இந்த இந்திரிய விஷயங்களைப் புசித்து பரம ஏழைகள் உமி தவிடு இவற்றைத் தின்று சந்தோஷிப்பதுபோல், சந்தோசிப்பான். தாஹம் எடுத்த மான் பரபரப்புக் கொண்டு, உண்மையாய் ஜலமிருக்குமிடம் போகாமல், பாலைவனத்தில் கானல்நீரைப் பார்த்து, அதை உத்தேசித்தோடி தாஹத்தை தீர்த்துக்கொள்ளப் பெறாமல், ஓடி வந்ததால் முன் இல்லாததான ஓர் சிரமத்தை தேடிக்கொள்வது போலும், தன் ஸ்வரூபத்தை அறியாமையால், ஆத்மாநந்தத்தை ஒரு நாளும் அநுபவியாதவன், இந்திரிய விஷயங்களை சுகமுள்ளவை என்று நினைத்து, அதிக துக்கத்துக்காளாவான். மற்றப்படியாய் விஷயத்தில் சுகம் இருக்கிறதென்று சொல்வது, அஸங்கதமாய் இருக்கிறது. விஷயத்தில், உண்மையாக ஸுகம் இருக்குமேயானால், மின்னல் ப்ரகாசத்தைக் கொண்டு உலகத்தில் எல்லா வியாபாரங்களையும் நடத்திக் கொள்ளலாம். காற்று, மழை, வெய்யில், இவைகளின் நொந்தர வில்லாதபடி, மேகத்தின் நிழலில் வசித்து வாழமுடியுமேயானால், மூன்றடுக்கு மெத்தை வீடுகள் கட்டிக்கொள்ள என்ன அவசியம் இருக்கிறது ? வாஸநாபி என்னும் விஷக்கிழங்கிற்கு, மதுரம் என்று பெயர்வைத்தது போலும், ஜலசம்பந்தம் கொஞ்சமேனுமில்லாத கானலில் தோன்றும் தோற்றத்தை, ம்ருகஜலம் என்பது போலும், விஷயபோகத்தால் ஒருவித சுகம் கிடைப்பதாக எண்ணி, பேசுவது, ஞானமற்ற பேச்சே தவிர, வேறொன்றுமில்லை. மேலும், பாம்பு படத்தின் கீழ் இருக்கும் நிழல் எலிக்கு எவ்வளவு சீதலமாயிருக்குமோ, தூண்டி முள்ளின்மேல் உருட்டிவைக்கப்பட்டிருக்கும். மாமிசம், மீனுக்கு எவ்வளவு நன்மையாயிருக்குமோ, இந்திரிய விஷயபோகம் ப்ராணிகளுக்கு அவ்வளவு சுகமாய் இருக்கும். பாண்டுரோகத்தால் தேஹம் பெருத்தால், சந்தோஷிப்பதற்கிடமில்லாமல், மரணம் நெருங்கிவிட்டது என்று துக்கிக்கக் காரணமாவது போலும், இந்த இந்திரிய விஷயசுகம் அடிமுதல் நுனிவரைக்கும் துக்கமே என்று விரக்தர்களான விவேகிகள் மதித்து, அதை விலக்கியே வைப்பார்கள். ஆனால் முற்றிலும் ஞானமற்றவர்கள் என்ன செய்வார்கள் ? இதை சேவிக்காமல் அவர்களுக்கு அரை நிமிஷங்கூட பொழுது போவதில்லை. அய்யோ இந்த அறிவிலிகள் இதின் உள்ள மர்மத்தை அறியாமல், நாற்றம் நாறும் சீழில் பிறந்து அதிலேயே உழன்று கிடக்கும் புழுக்களுக்கு, அந்த

சீழின்மேல் வெறுப்பு தோன்றாதது போலும், மனசில் ஓர் வெறுப்பும் தோன்றாதவர்களாய், இதிலேயே கிடந்து உழல்கிறார்கள். இப்படி துக்க அனுபவத்துக்கென்றே பிறந்த இவர்களுக்கு, இத்துக்கமே உயிர் நிலையாயிருக்கிறது. சேற்றை விட்டு வெளிப்படமுடியாத தவளைகள் போலவும், நீரைவிட்டு வெளிப்படமுடியாத மீன்களைப்போலவும், இந்திரிய விஷயசுகத்தை விட்டு வெளிப்படமுடியாதவர்களாய் இவர்கள் இருக்கிறார்கள். ஆகவே விசாரித்துப் பார்க்கும்போது, விஷயம் என்பது இவ்வளவு கெட்டதாயிருப்பதால், ஹே அர்ஜுனா, நீ மறதியாய்க்கூட, அதின் வழி செல்லக்கூடாது. ஆகையால் விரக்தர்கள், சுகம் போல் தோன்றி, உண்மையில் துக்கமாய் இருக்கும் இந்திரிய விஷயபோகத்தைக்கண்டு, அதை விஷமாக நினைத்து வெறுத்திருப்பார்கள். இவ்வாறு ஞானதேவர் கூறுகிறார்.

மலத்தின் மேல் ஓட்டைத் துணியைப் போட்டு அதில் மேல் படுத்து புரளுவது யாருக்காவது சுகமாக இருந்தால், உனக்கும் ஒரு பெண் மேல் புரளுவதும் சுகமாகத்தான் இருக்கும். நீ விரும்பும் ஒரு பெண்ணின் தன்மைகள் அனைத்தும் உனக்கு இருப்பதாக கற்பனை செய்து பார்த்தால் உனக்கு எப்படி இருக்கும். அதாவது உனக்கு மார்பகங்கள் தொங்குவதாகவும் உன் முகம் அவளுடைய முகம்போலவும் உன் குரல் அவளுடைய குரல் போலவும் ஏன் உனது அனைத்து அவயங்களும், உள்ளமும், அவளுடையது போன்றே மாறிவிட்டதாக கற்பனை செய்து பாரேன்.

சேகர் : (கண்களை முடி கற்பனை செய்துவிட்டு) எனக்கு மார்பகங்கள் தொங்குவதுபோலவும், என் குரல் பெண்குரல்போல் மாறுவதாகவும் கற்பனை செய்தால் எனக்கு கொஞ்சம் அருவருப்பாகவே இருக்கிறது. மேலும் நான் பெண் தன்மையாக மாறுவதை என்னால் சகித்துக்கொள்ளவே முடியாது.

ராம் : சிங்கத்தின் கம்பீரமான நடையும் கர்ஜனையும் உனக்கு பிடிக்குமா ?

சேகர் : மிகவும் பிடிக்கும்.

ராம் : சரி. ஒருவர் உனது நடை மற்றும் குரலை பார்த்து சிங்கத்தைபோன்று கம்பீரமாக உள்ளது என்று கூறினால் மகிழவாயா ? வருந்துவாயா ?

சேகர் : மகிழ்வேன்.

ராம் : இதற்குக் காரணம் என்னவென்றால் நாம் விரும்பும் அனைத்தும் நம்மைவிட உயர்ந்த தன்மை உடையதாக இருக்கும், அத்தன்மை நமக்கே வரும்போது நாம் ஒரு உயர்நிலைக்கு செல்கின்றோம் என்ற காரணத்தினால் நமக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது. அதனால்தான், உன்னைவிட உயர்ந்த நிலையில் இருக்கும் சிங்கத்தின் நடையும் குரலும்

உனக்கு வரும்போது மகிழ்ச்சியாக இருக்கிறது. மேலும் ஒரு உதாரணம். கருப்பாக உள்ளவர்கள் வெண்மை நிற தோலுக்கு ஆசைப்படுகிறார்கள். இத்தன்மை தங்களுக்கு ஏற்பட்டால் மிக்க மகிழ்ச்சி அடைவார்கள். எவரும் தங்களைவிட கீழான தன்மைகளை எப்பொழுதும் விரும்பமாட்டார்கள். அப்படி அத்தன்மை அவர்களிடத்தில் வந்தால் அவர்களால் சகித்துக்கொள்ள முடியாது. உண்மைதானே.

சேகர் : உண்மைதான். அதற்கென்ன இப்போது ?

ராம் : எனவே உன் தன்மைகளைவிட அப்பெண்ணின் தன்மைகளை உனக்கு பிடிக்கவில்லை என்று நீயே ஒத்துக்கொண்ட சிங்கத்தின் உதாரணம் மூலம் தெரிகிறது. பின் எதற்காக உனக்கு பிடிக்காத தன்மை உடையதாக கருதப்படும் பெண்ணிடம் மோகம் கொண்டு, அவளுடன் கலந்துவிடுவதற்கு ஏங்கித் தவித்து, அதற்காக எத் துன்பத்தையும் சகித்துக்கொள்ள தயாராக இருக்கிறாய ?.

சேகர் : ஏன் என்று எனக்கே தெரியவில்லை. நீ கூறியதனைத்தும் உண்மைதான் என்றாலும் எனக்கு ஏன் மோகம் ஏற்படுகிறது ?

ராம் : ஒருவன் கடற்கரையிலுள்ள கிணற்றிலிருந்து தண்ணீரை இரைத்து மிகவும் சிரமப்பட்டு மீண்டும் அதை கடலிலேயே ஊற்றிக்கொண்டிருக்கிறான். அவனிடம் சென்று ஏன் இப்படி செய்கிறாய் என்று கேட்டால், "மிகவும் சிரமாகத்தான் இருக்கிறது. ஆனால், ஏன் செய்கிறேன் என்று எனக்கே தெரியாது" என்று பதில் கூறினால் அவனை நீ என்னவென்று நினைப்பாய் ?

சேகர் : பைத்தியக்காரன் என்று நினைப்பேன்.

ராம் : அப்படியெனில் உன்னையும் நான் அப்படித்தான் நினைக்கவேண்டும். இதைத்தான் ஞானிகள் அஞ்ஞானம், அறியாமை, மாயை என்று கூறுகிறார்கள். எனவே உன்னுடைய மாயமயக்கத்தில் இருந்தும் அறியாமையில் இருந்தும் ஞானத்தினால் விழித்துக்கொண்டால் சுகம் பெறுவாய். மேலும், உன்னுடைய மோகத்திற்கு காரணம் உன்னுடைய மென்டல் புரோகிராம் (மன அமைப்பு) தான்.

சேகர் : மென்டல் புரோகிராம் பற்றி கொஞ்சம் விவரமாகக் கூறு.

ராம் : நாம் ஒவ்வொருவருமே மனதில் ஏராளமான எண்ணங்களை பதித்துக்கொண்டுதான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். உதாரணமாக, ஒரு ஆச்சார்ய பிராமணன் மற்றும் ஒரு முஸ்லீம் இருவரும் நண்பர்கள். அவர்கள் இருவரும் ஒரு நாள் பேசிக்கொண்டிருக்கும் போது அவர்களிடம் ஒரு மாமிச உணவுத் தட்டு வைக்கப்படுகிறது. அதைப் பார்த்த உடனேயே பிராமண அன்பர்க்கு வாந்தி மற்றும் குமட்டல் உண்டாகிறது. ஆனால், முஸ்லீம் அன்பரோ நாக்கில் எச்சில் ஊற மகிழ்ச்சி அடைகிறார். இந்நிகழ்ச்சியிலிருந்து பிராமணனின் துன்பத்துக்கும் முஸ்லீமின் இன்பத்துக்கும் மாமிச உணவு காரணமல்ல என்பதும், அவரவர்களுடைய எண்ணங்களே காரணம் என்பதும் தெரிகிறது. ஆனால், தவறுதலாக அவர்களிருவரும் தங்களின் துக்க சுக

அனுபவத்துக்கு மாமிச உணவே காரணம் என்று நினைக்கிறார்கள். "தீதும் நன்றும் பிறர் தர வாரா" அதாவது நம் வாழ்வில் நடைபெறும் எல்லா சுக துக்கங்களுக்கும் காரணம், நம்முடைய எண்ணங்களே தவிர, வெளியிலிருந்து சுகமோ துக்கமோ ஏற்படுவதில்லை. எனவே நீ உன் மனதில் இந்தந்த மாதிரியான அங்க லட்சணங்களுடன் ஒரு பெண்ணைப் பார்த்தால் நான் மோகம் கொண்டு சுகமடைவேன் என்கின்ற எண்ணப்பதிவே பெண்களிடம் நீ கொள்ளும் மோகத்திற்கு காரணம். உனக்கு மிகுந்த மோகத்தைத் தூண்டும் ஒரு பெண் இன்னொருவருக்கு சாதாரணமாக காட்சியளிக்கிறாா். ஆனால், அவருக்கு மிகுந்த மோகத்தை தூண்டும் ஒரு பெண் உனக்கு சாதாரணமாக காட்சியளிக்கிறாா். உதாரணமாக, உனக்கு பிடித்த திரைப்பட நடிகை உன் நண்பனுக்கு பிடிப்பதில்லை. அதே சமயம், அவனுக்கு பிடித்த நடிகை உனக்கு பிடிப்பதில்லை. இதிலிருந்து ஒவ்வொருவருடைய மோகத்திற்கும் காரணம் பெண்ணல்ல, அவரவருடைய எண்ணப்பதிவுகளே காரணம் என்றும் தெரிகிறது. சுகர் என்ற ஒரு ஞானியை மயக்க ஊர்வசி, ரம்பை போன்ற மிகவும் அழகுடைய பெண்கள் அவரை மயக்க முயன்றும், அவர்களின் மேல் அவர் ஆசையோ மோகமோ சிறிதளவு கூட கொள்ளவில்லை. தன்னுடைய எண்ணப்பதிவில் அனைவரையும் சக்தியாக பாவித்ததின் விளைவே அவர் மோகம் கொள்ளாததற்கு காரணமாகும்.

சமுதாயமும் சுற்றுப்புற சூழ்நிலையும் உன்னிடம் எண்ணப் பதிவுகளை கொண்டு வரும்போதும் அல்லது திணிக்கும்போதும், நீ உன்னுடைய அறிவைப் பயன்படுத்தி அவை உனக்கு நன்மையா, தீமையா என்று ஆராயவேண்டும். உன்னுடைய அறிவீனத்தின் காரணமாக அதைப் பதித்துக்கொண்டதுதான், உன்னுடைய பெண் மோகத்துக்கும், அனைத்து சுகதுக்கங்களுக்கும் காரணமாகும். ஹரிச்சந்திரா், தன் அறிவை பயன்படுத்தியதால்தான் அவருடைய சூழ்நிலைகளால் அவருடைய எண்ணப்பதிவை மாற்ற முடியவில்லை.

மேலும், ஓர் உண்மையைக் கூற விரும்புகிறேன். ஒரு குளவி, ஒரு புழுவை தன் கூட்டில் வைத்து, தினமும் கொட்டிக்கொண்டே இருந்தால் அப்புழு, பயத்தின் காரணமாக எந்த நேரமும் குளவியையே சிந்திப்பதால் நாளடைவில் குளவியாக மாறிவிடுகிறது. மேலும் கிருஷ்ணா், பகவத் கீதையில் "ஒருவன் தன் வாழ்நாள் முழுவதும் எதை நினைத்துக்கொண்டு அப்படியே இறக்கிறானோ அவனுடைய நினைப்புக்கேற்றவாறு மறுஜென்மம் எடுக்கிறான்." என்று கூறுகிறாா்.

எனவே, இதற்குப் பிறகும் உன் மனது பெண்ணுக்காக ஏங்கிக்கொண்டிருந்தால் நீ மறு ஜென்மத்தில் பெண்ணாகவே பிறப்பாய்.

சரி இது ஒரு புறம் இருக்கட்டும். உனக்கு ஆண்கள் மேல் காமம் இல்லையா ?

சேகர் : இல்லை
ராம் : ஏன் ?
சேகர் : இருவரும் ஒரே இனம்தானே!

ராம் : ஒரே இனமாக இருந்தால் காமம் வராது என்று கூறும் நீ சற்று ஆழமாக பெண்களைப் பார்த்தால் உண்மை புரியும். அதாவது, உன்னுடைய பார்வையை எலும்புக்கூடு வரைக்கும் ஊடுருவி செலுத்தினால் உண்மை புரியும். ஏனென்றால், எலும்புக்கூட்டில் ஆணுக்கும், பெண்ணுக்கும் வித்தியாசம் கிடையாது. உடம்பிற்கு அடித்தளம் எலும்புக்கூடு. அதில் வித்தியாசம் இல்லாதபோது உனக்கு எப்படி காமம் ஏற்படுகிறது ?

சரி உனக்கு பிணத்தின் மீது மோகம் ஏற்படுகிறதா ?

சேகர் : இல்லை. பிணத்திற்குதான் உயிர் இல்லையே ?

ராம் : உடல் இருந்தும் உயிர் இல்லை என்றால் மோகம் இல்லையென்கிறாய். உயிர் மேல்தான் உனக்கு மோகம் என்று தெரிகிறது. உயிரென்றால் சக்தி. இந்த சக்தியைப் பற்றி கொஞ்சம் ஆழமாக தெரிந்துகொள்ளவேண்டும். என் எதிரில் ஒரு மர நாற்காலி இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். என்னால் இந்த நாற்காலியில் உள்ள சக்தியை உறிஞ்சிவிடமுடியும் என்றால், நாற்காலி இருக்குமா ? இருக்காது. நாற்காலியில் உள்ள சக்தியை (அதை எரித்து) வெப்ப ஆற்றலாக மாற்றினால் அங்கு நாற்காலி இருக்காது. இதிலிருந்து, சக்தியே நாற்காலியாக உள்ளது என்று தெரிகிறது. இந்த விதியே உயிருள்ள மற்றும் உயிரற்ற அனைத்துக்கும் பொருந்தும். ஆதலால், சக்தியே ஆகாயம் முதல் எல்லாமுமாக இருக்கிறது என்று உணர்ந்துகொள்ள வேண்டும்.

இப்போது உன் உயிருக்கும் (சக்திக்கும்) நீ மோகிக்கும் ஒரு பெண் உயிருக்கும் (சக்திக்கும்) வேறுபாடு இல்லை என்றும் இரண்டும் ஒன்றே என்றும் தெரிகிறது அல்லவா ? சக்தியே உருவமாக காட்சியளிக்கிறது. சக்தியே எல்லா இடத்திலும் இருக்கிறது. இவ்வகையில் சிந்திந்தால் நீ மற்ற எல்லா பெண்களுடனும் என்றுமே இணைந்தே இருக்கிறாய் என்று புரியும். ஆனால், நீயோ பெண்களுடன் இணைந்தே இருந்தும் புதியதாக இணைகிறோம் என்கின்ற பிரம்மையில் உனக்கு சுகம் ஏற்படுகிறது என்று கூறுகிறாய்.

இதையே திருமூலர் இவ்வாறு கூறுகிறார்.

<u>திருமூலர் பாடல்</u>

உடம்பும் உடம்பும் உடம்பைத் தழுவி
உடம்பிடை நின்ற உயிரை அறியார்
உடம்பொடு உயிரிடை நட்பறியாதவர்
மடம்புகு நாய்போல் மயங்கு கின்றாரே

சேகர் மௌனமாக உள்ளார்.

ராம் : சரி பெண் மோகத்தில் நீ எவ்வளவு சக்தியை விரயம் செய்கிறாய் என்பது உனக்கு தெரியுமா ?

சேகர் : தெரியாது..

ராம் : உணர்ச்சியின் உச்சகட்டத்தில் நீ வெளியிடும் விந்து ஆயுர்வேதப்படி ஏழு தாதுக்களில் ஏழாவது தாதுவாக அமைகிறது. இவ்வளவு கஷ்டப்பட்டு சேமித்ததை சில நிமிடம் சுகம் தெரிகிறது என்பதற்காக வீணாக்குகிறாய். உதாரணம்.. மாடு புல் சாப்பிடுகிறது. புல்லானது சாணி என்கின்ற கழிவு பொருளைக் கழித்து பாலாக மாறுகிறது. பாலை நன்றாக காய்ச்சி, உறை ஊற்றி, ஒருநாள் காத்திருந்து தயிராக மாற்றி, பின் அதை கடைந்து மோரைப் பிரித்து வெண்ணை எடுத்து அதைக் காய்ச்ச, அது நெய்யாக மாறுகிறது. ஒருவன் அந்த (இவ்வளவு செயல்களுக்குப்பின் மாறிய) நெய்யை வெளியே போட்டு வீணாக்கினால் அது எவ்வளவு மடத்தனமோ அவ்வளவு மடத்தனம் நீ விந்தினை வீணாக்குவது. ஏனென்றால், நீ சாப்பிடும் உணவிலிருந்து ஏழாவது தாதுவாக இறுதியில் மாற்றமடைவது விந்துவாகும். அதை வெளிவிடும்போது நீ உணரும் ஒரு நொடியே இவ்வளவு சுகம் தருகிறது என்று நினைக்கிறாய். அதை வெளியே விட்டு வீணாக்காமல், உன் உடல் முழுவதும் மேலேற்றி பரவச்செய்து உணர்ந்தால் எவ்வளவு சுகம் இருக்கும் என யோசித்துப்பார் தெரியும். இதையே திருமூலர்

ஒழியா விந்து உடல் நிற்க நிற்கும்
அழியாப் பிராணன் அதிபலம் சக்தி
ஓழியாத புத்தி தவம்செபம் மோனம்
அழியாத சித்தி உண்டாம் விந்து வற்றிலே.

விந்து விளையும் விளைவின் பயன்முற்றம்
அந்த அழிவும் அடக்கத்தின் ஆக்கமும்
நந்திய நாதமும் நாதத்தால் பேதமும்
தந்துணர்வோருக்கு சயமாகும் விந்துவே.

“விந்து விட்டவன் நொந்து கெட்டான்” என்று ஒரு பழமொழி கூட உண்டு

சேகர் : நீ சொல்வது எல்லாம் சரிதான். இருந்தாலும் ஒரு அழகான பெண்ணை பார்த்தவுடன் ஒரு வித ஆனந்த உணர்வு ஏற்படுகிறதே.

ராம் : சரி, அந்த ஆனந்த உணர்வு எப்படி ஏற்படுகிறது என்று சிந்தித்துள்ளாயா ? அந்த சமயத்தில் உன் மனதில் என்ன மாற்றம் ஏற்பட்டு உனக்கு சுகம் கிடைக்கிறது என்று கவனித்துள்ளாயா ?

நன்றாக சிந்தித்துப்பார், ஒரு பெண்ணை மோகத்துடன் பார்க்கும் போது உனக்கு வேறு வித எண்ணங்கள் வராது. உன் மனம் (எல்லா விதத்திலும்) ஒருமுகப்பட்டு அதில் ஈடுபடுவதால் உனக்கு சுகம் தெரிகிறது. ஆனால் பிரச்சனை என்னவென்றால் இந்த மாதிரி ஒரு பெண்ணுடன் நான் இருந்தால் தான் ஒருமுகப்படுவேன் என்று **( Mental program )** மன அமைப்பை ஏற்படுத்திக் கொள்கிறாய். உனக்கு மோகம் ஏற்படுவது போன்று ஒரு பெண் வந்தால் மோகம் அடைந்து, அதனால் ஒருமுகப்பட்டு, சில நிமிடங்கில் விந்தினையும் வெளியிட்டு, ஒருமுகம் கலைந்துவிடுவதை மிகப் பெரிய சுகமாக நினைத்துக் கொண்டு இருக்கிறாய்.

ஆனால் ஞானியரோ, உனக்கு மோகத்தில் ஏற்படுவதைவிட, பல நூறு மடங்கு மனம் ஒருமுகப்பட்டு 24 மணி நேரமும் பேரானந்தத்தில் (சக்தியை

வீணாக்காமல்) இருக்கிறார்கள். ஆனால் நீ, சக்தியை வீணாக்கி கஞ்சத்தனமாக சில நிமிடம்தான் சுகம் அனுபவிக்கிறாய். மீதி நேரம் முழுவதும் அதை அடைவதற்காக ஏங்கி, அடைவதற்கு மிகவும் கஷ்டப்படுகிறாய்.

சேகர் மௌனமாக கேட்டு கொண்டு இருக்கிறார்.

ராம் : இதற்கு பிறகும் உனக்கு சந்தேகம் தீரவில்லை என்றால் இதையாவது கேள். சரி உனக்கு திருமணம் ஆகிவிடுகிறது என்று வைத்துக் கொள்வோம். திருமணம் ஆன முதல் 3 மாதத்தில் நீ எத்தனை தடவை தாம்பத்ய உறவு வைத்துக் கொள்வாய் ?

சேகர் : ஒரு நாளைக்கு குறைந்தது 3 தடவை என்றாலும் 3 மாதத்தில் கிட்டத்தட்ட 200–250 தடவை உறவு வைத்துக் கொள்வேன்.

ராம் : திருப்பதி லட்டு சாப்பிட்டு இருக்கிறாய் அல்லவா ? அதையே தினமும் ஒரு நாளைக்கு 3 வீதம் தினமும் ஒரு மாதத்திற்கு உன்னை சாப்பிடச் சொன்னால்..... ஒரு மாதம் கழித்து உனக்கு லட்டுமேல் விருப்பு வருமா ? அல்லது வெறுப்பு வருமா ?

சேகர் : திகட்டிவிடும். வெறுப்புதான் வரும்.

ராம் : உள்ளும் புறமும் (முழுவதும்) இனிப்பாக, நல்ல மணமாக உள்ள லட்டே ஒரு மாதத்தில் வெறுப்பை ஏற்படுத்தும் உன் மனதுக்கு, மேல் தோல் போட்டு மூடிய கழிவுத் தொட்டியை (அதாவது பெண்ணின் உடம்பை) 200–250 தடவை பார்த்த பின் (அல்லது அதற்கு முன்னரே) உனக்கு வெறுப்பு ஏற்பட்டுவிடும். பின் மீதி 30 ஆண்டுகள் என்ன பண்ணப் போகிறாய் ? ஏனென்றால், வேண்டாம் என்றால் தள்ளிவிடவோ, ஒதுக்கிவிடவோ முடியாது.

சேகர் : நீ சொல்வது உண்மைதான் என்றாலும், என்னுடைய உறவினர்களும், நண்பர்களும், குடும்பத்தாரும் திருமணம் முடித்து பல வருடங்கள் ஆகிறது. அவர்களும் என்னை ஏன் திருமணம் செய்து கொள்ள சொல்கிறார்கள் ?

ராம் : தூரத்தில் மின்னிக் கொண்டிருக்கும் பீங்கானை (கண்ணாடித்துண்டை) வைரம் என்று எண்ணி அதை கையில் எடுத்து உபயோகித்த பின் வைரம் இல்லை என்று தெரிந்து கொள்கின்றனர். இருந்தாலும் யோகம் இல்லாததால் தனக்கு மட்டுமே கண்ணாடித் துண்டு கிடைத்தது என்றும் மற்றவை வைரம் என்றும் நினைத்துக் கொண்டு, உன்னையும் தூண்டி, எடுத்து உபயோகிக்கச் சொல்லுகிறார்கள். பாவம், அவர்களுக்கு தெரியவில்லை, எல்லாமே கண்ணாடித் துண்டுகள்தான் என்று. இங்கே நான் கூறிய கண்ணாடித் துண்டை பெண் இன்பத்துக்கு ஒப்பிட்டால் உண்மை புரியும். அதனால்தான் அவர்கள் உன்னை திருமணம் செய்து கொள்ளத் தூண்டுகிறார்கள். இதையே ஞானதேவர், தாகம் எடுத்த மான் கானல்நீரை உண்மையான நீர் என்று எண்ணி வேகமாக ஓடி மார்புமுட்டி, கீழே விழுந்து மிகுந்த சிரமத்துக்கு ஆளாகி, பின்பு மற்றொரு கானல் நீரை, நீர் எனநினைத்து ஓட எத்தனிப்பது போல இருக்கிறது என்பார்.

மேலும் ராம், தன் தந்தையிடம் நடத்திய விவாதத்தை சேகரிடம் விளக்குகிறார்.

தந்தை : உனக்கு திருமண வயது வந்து விட்டது. எனவே திருமணம் செய்து கொள்.

ராம் : ஏன் ?

தந்தை : இது என்ன கேள்வி ? ஊரில் எல்லோரும் கல்யாணம் செய்து கொண்டுதானே வாழ்கிறார்கள் ?

ராம் : எல்லோரும் செய்கிறார்கள் என்பதற்காக நான் எப்படி செய்ய முடியும். உதாரணத்துக்கு ஊரில் உள்ள பெரும்பாலோர் (ஆண்கள்) சிகரெட் பிடிக்கிறார்கள் என்பதற்காக நானும் புகைப்பிடித்தால் ஏற்றுக் கொள்வீர்களா ?

தந்தை : அது எப்படி முடியும் ? ஏற்றுக்கொள்ளமாட்டேன்.

ராம் : எல்லோரும் செய்கிறார்கள் என்ற காரணத்தை தள்ளிவிட்டு வேறு சரியான காரணத்தை கூறுங்கள்.

தந்தை : சரி உன்னுடைய உணர்வுகளை பகிர்ந்து கொள்ள ஒரு நபர் தேவை அல்லவா ? அதற்காகவாவது திருமணம் செய்து கொள்.

ராம் : அந்த நபர், நண்பனாக, சக தொழிலாளியாக, ஆசானாக அல்லது பெற்றோர் மற்றும் உடன் பிறந்தோர் ஆகக் கூட இருக்கலாம் அல்லவா ? ஏனென்றால், இவர்களை விடவா எங்கோ, மற்ற பழக்க வழக்கங்கள் உள்ள என்னை அறியாத பெண் என் உணர்வுகளை புரிந்துகொள்வாள் ?

தந்தை : சரி கடைசி காலத்தில் உனக்கு முடியாத சமயத்தில் பணிவிடை செய்ய மனைவி, மக்கள் தேவைப்படுமே. அதற்காகவாவது திருமணம் செய்து கொள்ளேன்.

ராம் : கடைசி காலத்தில் அவள் நோய்வாய்ப்பட்டு படுத்துக் கொண்டால் நானல்லவா பணிவிடை செய்ய வேண்டும். கடைசி காலத்தில் நோய்வாய்ப்பட்டு கஷ்டப்படாமல் இருக்க இளமை இருக்கும் போதே யோகாசனங்கள் மற்றும் உணவுக் கட்டுப்பாடு ஆகியவற்றை மேற்கொண்டு, எப்போதும் சுகமாக வாழ அறிவுறுத்தாமல், திருமணம் செய்து கொள். நோய் வந்தால் அவர்கள் காப்பாற்றுவார்கள் என்று கூறுவது எவ்வளவு அறியாமை. மேலும், திருமணம் முடித்த எத்தனை பேர் கடைசி காலத்தில அனாதையாக இருக்கிறார்கள் என்பது உங்களுக்கு தெரியாதா ?

தந்தை : சரி, தாம்பத்திய ஆசையை பூர்த்தி செய்து கொள்வதற்காகவாவது நீ திருமணம் செய்துதான் ஆக வேண்டும். ஏனென்றால் காமத்தை வெல்ல யாராலும் முடியாது.

ராம் : இதைத்தான் முதலிலேயே உங்களிடமிருந்து எதிர்பார்த்தேன். சரி

உங்களுக்கு திருமணம் ஆகி எத்தனை ஆண்டுகள் ஆகின்றன ?

தந்தை : 30 ஆண்டுகள்

ராம் : உங்களுக்கு தாம்பத்தியத்தில் ஏதேனும் குறை இருந்ததா ?

தந்தை : இதுவரை இல்லை. நன்றாகத்தான் என்னுடைய தாம்பத்திய வாழ்க்கை போய்க் கொண்டிருக்கிறது.

ராம் : உங்களுக்கு ஆசை பூர்த்தி ஆகிவிட்டதா ?

தந்தை : அது வந்து.... அது எப்படி பூர்த்தியாகும் ?

ராம் : 30 ஆண்டுகள் தாம்பத்தியம் நன்றாக இருந்தும், இன்னும் காமம் இருந்து கொண்டுதான் இருக்கிறது என்று கூறும் நீங்கள், என்னை ஏன் திருமணம் செய்து கொள்ள சொல்கிறீர்கள் என்று எனக்கு புரியவில்லை. நான் திருமணம் செய்து கொண்டாலும் செய்து கொள்ளாவிட்டாலும் காமம் தீராது என்று நீங்களே ஒப்புக் கொள்கிறீர்கள். அது மட்டுமல்ல. திருமணம் முடிந்த என் நண்பர்களுடன் நான் செல்லும் போது ஒரு பெண் எங்கள் முன் சென்றால் திருமணம் ஆனவர்கள்தான் அதிக ஏக்கத்துடன் அந்தப் பெண்ணை பார்க்கிறார்கள். (திருமணத்திற்கு முன்பு இருந்ததைவிட) இது எப்படி இருக்கிறது என்றால். ஒருவருக்கு தன் உடம்பில் ஒரு இடத்தில் அரிப்பு எடுக்கிறது, அந்த அரிப்பை போக்குவதற்கு அதை சொரிந்து விடுகிறார். (சொரியும்போது சுகமாக இருக்கிறது என்று சந்தோசம்) சொரிந்ததன் விளைவால் அந்நோய் உடல் முழுவதும் பரவிவிடுகிறது. அதனால் அரிப்பு அதிகமாக எடுக்கிறது. இங்கே அரிப்பு என்று நான் கூறியது காமநோயை. ஆனால் நான் எனக்குள் இருக்கும் காமநோயை சொரியாமல், வைராக்கியம் என்னும் பலத்தால் ஞானம் என்னும் வாளால் வெட்டிவிட தீர்மானித்துள்ளேன்.

தந்தை : இப்போது நீ சொல்வது சரி, இன்று இவ்வளவு தெளிவாக பேசினாலும், பிற்காலத்தில் உன் மனம் மாறி பெண் இன்பத்தை அனுபவிக்காமல் இருந்ததை நினைத்து வருந்துவாய். எனவே அனுபவித்த பின் இதை நீ கூறினால் நான் ஏற்றுக் கொள்கிறேன்.

ராம் : நீங்கள் சொல்வது சரிதான் என்றாலும், நான் பெண் இன்பத்தை அனுபவிக்கலாமா ? நான் காம நோயை எடுக்க யோகா ஆப்பியாசம் செய்கிறேன். பெண் இன்பம் போக அனுபவம் எனக்கு இல்லை என்றால் நான் ஏன் யோகா அப்பியாசம் செய்ய வேண்டும். சுகப்பிரம்மர் போன்று பிறக்கும் பொழுதே ஞானியாக அல்லவா பிறந்து இருப்பேன். காம உணர்வு 12, 13 வயதில் இருந்தே இருக்கும் என்று உங்களுக்கு தெரியும். அப்பொழுது இருந்தே அந்த அரிப்பை (காமத்தை) போக்குவதற்கு எல்லோரும் சொரிந்து கொண்டுதான் இருக்கிறார்கள். திருமணத்துக்கு முன்னால் சுயமாக (சுயஇன்பம்) சொரிகிறார்கள். திருமணத்துக்கு பின் சீப்பு (மனைவி) மூலம் சொரிகிறார்கள். இதுபோக கனவிலும் அந்த சுகத்தை அனுபவிக்கிறோம். இந்த சுகத்தை பல ஜென்மங்களாக அனுபவித்ததன் மூலமாகத் தான் மனது, அதற்கு தானாகவே அடிமையாகிறது. எனவே அனுபவம் இல்லாமல் நான் கூறியதாக நீங்கள் கூறுவதும் தவறு.

தந்தை : யாருமே திருமணம் செய்யவில்லையென்றால் இந்த உலகம் என்னவாகும்?

ராம் : உலகத்தை பற்றிய கவலை உங்களுக்கெதற்கு? உங்களை நம்பி உலகம் இருக்கிறதா? உலகத்தை நம்பி நீங்கள் இருக்கிறீர்களா? உலகம் இயங்குவதற்கு மூலாதாரமாக இருப்பது நிலம், நீர், சூரியன், காற்று, ஆகாயம் ஆகும். இவற்றை நம்பித்தான் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோமே தவிர அதற்கு நம்மால் ஒரு பிரயோஜனமுமில்லை. உலகத்தைப் (இவ்வண்டத்தை) பற்றி உங்களுக்கு தெரிந்தது மிகமிக சொற்பம். ஒன்றுமே தெரியாது என்று கூட கூறலாம். இரண்டு எறும்புகள் தங்களுக்குள் திருமணம் நடைபெறவில்லை என்றால் உலகம் என்னாகும் என்று பேசிக்கொண்டால் எப்படியோ அப்படி இருக்கிறது நீங்கள் கேட்கும் கேள்வி.

தந்தை நம் குடும்பத்திற்கு ஒரு வாரிசு இல்லாமல் போவதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. ஆதலால் அதற்காகவாவது நீ திருமணம் செய்துதான் ஆக வேண்டும்.

ராம் அதாவது உங்கள் புகழ் இவ்உலகில் மறையாமல் இருப்பதற்கு நான் இன்னாரின் பேரன் என்று என் மகன் உங்கள் பெயரை சொல்வதற்காக நான் திருமணம் செய்ய வேண்டும் அப்படித்தானே!

தந்தை ஆமாம். அப்படித்தான்.

ராம் உண்பது, உறங்குவது, என்னை பெற்றது இதைத் தவிர நீங்கள் எதைச் சாதீத்தீர்கள் என உங்களுக்கு இப்படி ஒரு ஆசை. ஆடு, மாடுகள் கூட இதைத்தான் செய்கின்றன. நீங்கள் உண்மையிலேயே ஏதேனும் சாதித்திருந்தால், அதை பரப்புவதற்கு நீங்கள் திருமணம் செய்யவில்லை யென்றாலும், உங்களுக்கு வாரிசு தானாகவே ஏற்பட்டிருக்கும். உதாரணமாக ராமகிருஷ்ண பரமஹம்ஸர் கருத்துக்களை பரப்புவதற்கு அவர் பெறாத பிள்ளையாக விவேகானந்தர் வரவில்லையா? பாரதியாருக்கு வாரிசாக பாரதிதாசன் வரவில்லையா? மேலும், பெற்ற பிள்ளைக்கு தகுதியில்லையென்றால் அவரை வாரிசு என கூறிக் கொள்வது அர்த்தமில்லாமல் போய்விடும். எனவே, தகுதியானவர்களுக்கு மட்டும் தானாகவே தகுதியானவர்கள் வாரிசுகளாக அடைவர். உதாரணமாக பகவான் ஸ்ரீ கிருஷ்னரின் யாதவ குலமே அழிந்துவிட்டது. ஆனால் இன்றைக்கு அவருக்கு பல வாரிசுகள் (நான் உள்பட) இருந்து கொண்டுதான் இருக்கிறார்கள். மேலும் திருமணம் செய்தாலும் குழந்தை இல்லாமல்கூட போகலாம். ஆனால் எதையுமே சிந்திக்காமல் இப்படி ஒரு கேள்வியை கேட்கிறீர்கள்.

தந்தை மௌனமாக உள்ளார். உரையாடல் முடிவடைகிறது.

ராம் : (சேகரிடம்) என்ன சேகர் நான் என் தந்தையுடன் நடத்திய உரையாடலைக் கேட்ட நீ ஏதேனும் கூற விரும்புகிறாயா?

சேகர் யோசிக்கிறார்.

அப்பொழுது ராமின் பழைய நண்பர் சுரேஷ் அங்கு வருகிறார்.

ராம் : வா சுரேஷ், எப்படி இருக்கிறாய் ? நீண்ட நாள் கழித்து சந்திக்கிறோம்.

சுரேஷ் : ஆம். இப்பொழுதுதான் நேரம் கிடைத்தது.

அப்பொழுது ராம், சேகரை சுரேஷிற்கு அறிமுகப்படுத்தி, சுரேஷிடம் இதுவரை நடந்த உரையாடல் முழுவதும் கூறுகிறார். இதன் பின் உரையாடல் தொடருகிறது.

சுரேஷ் : நீ சொல்வது உண்மை என்றாலும் திருமணத்தில் ஆனந்தம் இல்லை என்று எப்படி கூறலாம். ஏனென்றால் நான் 1 வருடமாக ஒரு பெண்ணைக் காதலித்து வருகிறேன். தினமும் 2 மணி நேரம் போனில் பேசுகிறேன். (அவள் வெளியூரில் இருக்கிறாள்) எனக்கு எந்தவித சலிப்பும் ஏற்படவில்லை. மேலும் மேலும் பேசிக்கொண்டே இருக்க வேண்டும் என்று ஆசை இருந்து கொண்டே இருக்கிறது.

ராம் : சரி. அதனால் திருமணம் செய்து கொண்டு கூடவே இருந்தால் மேலும் மகிழ்ச்சி பெருகும் என்று நினைக்கிறாய் அல்லவா ?

சுரேஷ் : ஆமாம். இதில் என்ன சந்தேகம்.

ராம் : சரி, முதலில் உன்னை நீ காதலிக்கிறாயா ?

சுரேஷ் : என்னை நான் காதலிப்பதா ? கேள்வி புரியவில்லையே

ராம் : அதாவது உனக்கு உன் மனதை பிடித்திருக்கிறதா ? என்று கேட்டேன்.

சுரேஷ் : (சிறிது யோசித்துவிட்டு) பல நேரங்களில் என் மனம் என் கட்டுபாட்டை மீறி தவறு செய்துவிடுவதால், என் மனம் மீது எனக்கு வெறுப்பாகத்தான் இருக்கிறது. உதாரணமாக ஆரோக்கியமான உணவு மட்டுமே சாப்பிட நினைக்கிறேன். ஆனால் சுவைக்கு ஆசைப்பட்டு தவறு செய்கிறேன். தினமும் உடற்பயிற்சி செய்ய நான் நினைத்தாலும் என் மனம் மறுக்கிறதே.

ராம் : ஆக உன்னை நீ காதலிக்கவில்லை. அதாவது, உன்னை உனக்கே பிடிக்கவில்லை. ஆனால், உன் காதலிக்கு உன்னை பிடிக்கிறது. இதே போன்று தான் உன் காதலியின் நிலைமையும், அதாவது, அவளை அவள் காதலிக்க மாட்டாள். ஏனென்றால், அவனவனுக்குத்தான் தெரியும் அவனவனின் லட்சணம். ஆனால், இப்பொழுது நீ தவறுதலாக அவளை ஒரு தேவதை என்று நினைத்துக் கொண்டு இருக்கிறாய். அவள் உன்னை தேவன் என்று நினைத்துக் கொண்டு இருக்கிறாள். ஆனால், நீங்கள் இருவரும் சாதாரண மனிதர்கள். இந்த உண்மை திருமணத்துக்குப் பின் தெரிய வரும்பொழுது, உன்னுடைய மகிழ்ச்சி பறந்துவிடும். இதை காதல் திருமணம் செய்து கொண்டவர்கள் பலர் மூலம் அறியலாம். மேலும், இதற்கு இன்னொரு மிக முக்கிய காரணமும் உண்டு.

“ மாற்றான் தோட்டத்து மல்லிகை மணக்கும் “ என்ற பழமொழி கேள்விப்பட்டு இருப்பாய். அதாவது, ஒரு மல்லிகை தோட்டம் ஒன்று உள்ளது. அதனருகே நாம் செல்கிறோம் என்று வைத்துக் கொள்வோம். அம் மல்லிகைப் பூ நறுமணத்தை அனுபவிப்போம். பின் அப்பூவின் அழகை ரசிப்போம். இதுதான் ஆனந்தம். இதைவிடுத்து “இவ்வளவு அழகாக மணத்துடன் இருக்கும் தோட்டத்தை நாம் உரிமையாக்கிக் கொண்டால் இன்னும் நன்றாக இருக்கும்” என அறிமையால் நினைப்பதுதான் அனைத்து பிரச்சனைகளுக்கும் காரணம். இதையே ரமண மகரிஷி ஓர் கேள்விக்கு பதில் அளிக்கும் போது, “எந்த ஒன்றையும் நாம் உரிமையாக்கிக் கொண்டால் நமக்கு 3 வித கடமைகள்” வருகின்றன. அதாவது ,

1. அதனை (உரிமையாக்கிக் கொண்டதை) உபயோக்கிக்கும் கடமை.
2. அதை பராமரிக்கும் கடமை.
3. அதை பாதுகாக்கும் கடமை ” என்று கூறுகிறார்.

மல்லிகைப்பூ தோட்டத்தையே உதாரணத்துக்கு எடுத்துக் கொள்வோம். அதனை உரிமையாக்கிக் கொண்டால் அதனை சரிவர உபயோகிக்கும் கடமை, பின் அதற்கு தகுந்த உரம் இடுதல், உழுதல், நீர் பாய்ச்சுதல் போன்ற பல செயல்கள், அதனை பராமரிக்க வேண்டிய கடமை. பின் அதை ஆடு, மாடு, மனிதர்களிடமிருந்தும் மற்றும் நோய் தாக்காமல் தகுந்த முன் ஏற்பாடுகள் செய்தும், காக்கும் கடமையும் வருகின்றன. நன்றாக யோசித்துப் பார். ஒருவன் இவ்விதப்பட்ட கடமைகளில் நாள்முழுவதும் செய்து கொண்டு மல்லிகைப்பூ நன்றாக பூக்க வேண்டும் என்று எதிர்பார்த்து கொண்டு இருப்பவன், அப்பூவின் நறுமணத்தையும், அழகையும் அனுபவிக்கவா முடியும்? இப்போது உன் காதலி, மாற்றான் தோட்டத்து மல்லிகை. இன்னும் நீ அவளை உரிமைபடுத்தவில்லை. எனவே, உனக்கு ஆனந்தம் தருகிறது. அதையே திருமணம் முடித்து உரிமையாக்கிக் கொள்ளும்போதுதான் மேற்கூறிய மூன்று வித கடமைகளால் அவதிப்படுவாய். உதாரணமாக, ஒரு டூ–வீலரை உரிமையாக்கிக் கொண்டால் அதற்கு தினந்தோறும் தீனி (பெட்ரோல்) போட வேண்டும், பராமரிக்க வேண்டும், பாதுகாக்க வேண்டும். ஒருவேளை நீ ஒரு மாதத்துக்கு வெளியூர் சென்றால் உன் டூ–வீலர்க்கு தீனி (பெட்ரோல்) போடத் தேவையில்லை. பராமரிக்க தேவையில்லை. ஆனால் நீ உரிமையாக்கிக் கொள்ள நினைக்கும் (உன் காதலி / மனைவி) நீ வெளியூர் சென்றாலும், அவளுடன் இல்லாத நிலையிலும், நீ கண்டிப்பாக தீனி போட வேண்டும். குழந்தை பிறந்தபின், மிக முக்கியம்மாக அதற்கும் மேற்குறிய 3 வித கடமைகளை நீ செய்ய வேண்டும். இதற்கே உன் பிராணன் முழுவதும் செலவழிந்து விடும். இது போக அவளுடைய உறவினர்களுக்காகவும், நீ பல விசயத்தில் விட்டுக் கொடுக்க வேண்டும், ஒத்துப்போக வேண்டும்.

இவற்றையெல்லாம்விட மிகப் பெரிய பிரச்சனை, நீ உரிமையாக்கிக் கொண்ட உன் காதலி உன்னை உரிமையாக்கிக் கொண்டதாக நினைத்து செயல்படுவாள்.

நீ உரிமையாக்கி வைத்துள்ள டூ–வீலர் உன்னை தான் உரிமையாக்கி கொண்டதாக நினைத்து செயல்பட ஆரம்பித்தால் எப்படி இருக்கும்?

அதாவது நீ காலை 9 மணிக்கு வண்டியை எடுத்தால் அது கிளம்பாமல் 10 மணிக்குத் கிளம்புவேன் என்று பிரச்னை பண்ணும், பின் நீ ஒரு வழியாக சமாதானப்படுத்தி வண்டியை கிளப்பிக் கொண்டு போகும்போது நீ கோவிலுக்கு செல்லவேண்டும் என்று வண்டியை திருப்ப, அது சினிமாவுக்கு போக அடம்பிடிக்கும், இது போக, நீ ஒரு வேகத்தில் வண்டியை செலுத்த அது வேறொரு வேகத்தில் போக நினைக்கும். இப்படிப்பட்ட ஒரு டூ–வீலர் உன்னிடம் இருந்தால் என்ன செய்வாய் ?

சுரேஷ் : அதை விற்றுவிடுவேன். அப்படிப்பட்ட வண்டியை வைத்துக்கொண்டு மல்லுக்கட்ட எனக்கு என்ன தலையெழுத்து ?

ராம் : நீ உரிமையாக்கிக்கொள்ளப்போகும் உன் காதலியிடம் இந்த டூ–வீலரை விட பல மடங்கு மல்லுக்கட்ட வேண்டிவரும். அப்போது என்ன செய்வாய் ? மேலும் அவளைப் பொறுத்தவரை நீயும் இப்படிப்பட்ட ஒரு டூ வீலர் தான்.

சுரேஷ் : எனக்கு பலமும் திறமையும் இருக்கிறது. எப்படியும் என் மனைவியை என் வழிக்கு கொண்டுவந்துவிடுவேன் என்ற நம்பிக்கை இருக்கிறது.

ராம் : உனக்கு பலம் இருக்கிறது என்று நான் ஒப்புக்கொள்கிறேன் (சுரேஷ் தினமும் ஜிம்முக்கு சென்று உடலை வலுவாக வைத்துள்ளவர்). நீ மோகத்துக்கு ஆட்படாதவரைக்கும்தான் உன் பலம் உனக்கு பயன்படும். இதை ஞானதேவர் ஒரு உதாரணம் மூலம் தெளிவாகவிளக்கியுள்ளார். "தாமரைப்பூவின் மகரந்தத்தில் உள்ள மோகத்தில் அதை சுவைத்துக்கொண்டிருக்கும் ஒரு வண்டு தனக்கு ஒரு மரத்தை துளையிடும் சக்தி இருந்தும் தாமரை இதழ் மூடிய பிறகு (சூரிய அஸ்தமனத்திற்கு பின்) தாமரை இதழை துளைத்து வெளியில் வரமுடியாமல் மோகத்தால் தன் உயிரையே விட்டுவிடும். அதேபோல் உன் மனைவி மீது உள்ள மோகத்தால் உன் சக்தியை இழந்துவிடுவாய். அதுமட்டுமல்லாமல் குழந்தை பாசத்தை முன்னிறுத்தி குழந்தைக்கு அதுவேண்டும், இதுவேண்டும் என்று உன்னை தன் வழிக்கு கொண்டுவர முயற்சி செய்வாள். பின் சமுதாயத்தை முன்னிறுத்தி நான் தாய்வீட்டுக்கு போய்விடுவேன் என்று மிரட்டுவாள். நீயோ சமுகத்திற்கும் உன் நண்பர்களிடமும் உனக்குள்ள மதிப்பை காப்பாற்ற அவள் வழிக்கு செல்லவேண்டிவரும். பாரதப்போரில் அர்ஜுனன் தன்னை விட பலம் வாய்ந்த பீஷ்மரை வீழ்த்த சிகண்டியை முன்னிறுத்தி போர்செய்தது போல் உன் மனைவி உன்னுடைய பலவீனத்தை முன்னிறுத்தி போர் செய்வாள். நீயோ, அவளுடைய பலஹீனத்தை முன்னிறுத்தி போர் செய்வாய். பின் நீங்கள் இருவரும் சேர்ந்திருக்கும் நேரத்தில் போர் செய்வதற்கும் மற்ற நேரத்தில் போர் எப்படி செய்வது என்பதை சிந்திப்பதற்கும் தான் சரியாக இருக்கும். பின் அமைதி, நிம்மதி, சுகம் என்ன விலை என்று கேட்க வேண்டிவரும். மேலும் உன்னுடைய குழந்தைகள் வெளியே சென்று வீடு திரும்ப தாமதம்னால் கூட, உன் நிம்மதி போய்விடும். உன் எதிர்பார்ப்புக்கு மீறி, உன் மனைவி, குழந்தைகள் நடக்கும் போது உனக்கு சங்கடமாக இருக்கும். இப்படி எண்ணற்ற பிரச்னைகளால் அவதிப்பட நேரிடும். பின் எப்படி நீ சுகமாக, ஆனந்தமாக வாழ முடியும்.

இதையே பட்டினத்தார் ஒரு பாடல் மூலம் விளக்குகிறார்.

நாப்பிளக்கப் பொய் உரைத்துநவநிதியம் தேடி
நலன் ஒன்றும் அறியாத நாரியரை கூடிப்
பூப்பிளக்க வருகின்ற புற்றீசல் போலப்
புலபுலெனக் கலகலெனப் புதல்வர்களைப் பெறுவீர்
காப்பதற்கும் வகையறியீர்; கைவிடவும் மாட்டீர்
கவர்பிளந்த மரத்துளையில் கால் நுழைத்துக் கொண்டே
ஆப்பதனை அசைத்துவிட்ட குரங்குதனை போல
அகப்பட்டீர் கிடந்துழல அகப்பட்டீரே!

இப்பாடலில் வரும் குரங்கினைப் போல் ( திருமணத்திற்குள் ) காலை மாட்டிக் கொண்டு ஆப்பு அசைத்து அவதிப்பட்டுக் கொண்டு காப்பதற்கும் வகையறியாமல், கைவிடவும் முடியாமல் கஷ்டப்பட வேண்டியது தான் வரும். கடைசியாக, சேகர், சுரேஷ் உங்கள் இருவருக்கும் நான் இவ்வளவு நேரம் கூறியதை ஒரே வரியில் கூற வேண்டுமானால்,

5 நிமிட சுகத்துக்காக மீதி 23 மணி 55 நிமிடங்கள் மிகவும் கஷ்டப்படப் போகிறீர்களா ? அல்லது 5 நிமிட சுகத்தை தியாகம் செய்து மீதி 23 மணி 55 நிமிடங்கள் நிம்மதியாக வாழப் போகிறீர்களா ?
முடிவு உங்கள் கைகளில்தான் உள்ளது.

சேகர் : நீ சொல்வதைப் பார்த்தால், திருமணம் செய்து கொள்வதே மிகப் பெரிய தவறென்றல்லவா ஆகிறது.

ராம் : திருமணம் செய்வது தவறு என்று நான் கூறவில்லை. திருமணத்தில் உள்ள எல்லா கோணங்களையும் தெரிந்து கொண்டு அதற்கு உண்டான தகுதியை வளர்த்துக் கொண்ட பிறகு, திருமணத்தை பற்றி, தேவைப்பட்டால் சிந்திக்கலாம் என்றுதான் கூற வருகிறேன்.

சேகர் : திருமணம் செய்து கொள்ள என்ன என்ன தகுதிகள் வேண்டும் ?

ராம் : ஓர் உண்மையான நட்பிற்கு தேவையான அதே தகுதிகள்தான் திருமணத்திற்கும் தேவை.

சேகர் : உண்மையான நட்பின் இலக்கணம் என்ன ?

ராம் : மூன்று மிக முக்கிய குணங்களை இலக்கணமாகக் கூறலாம்.

1. <u>எதிர்பார்ப்பு இல்லாமை:</u> அதாவது நண்பனுக்காக தன் உயிரைக்கூட கொடுக்கத் தயாரக இருக்க வேண்டும். அதே நேரத்தில், அந்த நண்பன் தனக்காக உதவி செய்ய வேண்டும் என எள் அளவும் நினைக்காமல் இருக்கவேண்டும்.. அவ்வாறின்றி தன்னைப் போல் தன் நண்பனும் தனக்காக எதையும் செய்ய வேண்டும் என எதிர்பார்த்தால் அது நட்பாகாது. அது ஒரு வியாபாரமாகிவிடும்.

2. <u>அகந்தை **(EGO)** இல்லாமை :</u> அதாவது, தான் பெரியவன் என்ற எண்ணமில்லாமை. ஒருவன் பணம், பொருள், பதவி, அறிவாற்றல் என எல்லா வகையிலும் உயர்வாக இருந்தாலும், தன் நண்பனை தனக்கு

சமமாகவே மதித்து பழகுவான். தன் நண்பனைவிட தன்னை மேலானவனாக நினைக்கவே மாட்டான். மாறாக, தன் நண்பன் தன்னைவிட மேலாவனாக ஆக வேண்டும் என்றுதான நினைப்பான். ஏனெனில், உண்மையான நட்பில் போட்டி, பொறாமை எள்ளளவும் இருக்காது.

**3.** <u>1% கூட ஒளிவு மறைவு இல்லாமை</u> **(open mindedness) :** அதாவது, ஒருவன் மனதில் உதிக்கும் எல்லா எண்ணங்களையும், இன்னொருவரிடம் தெரிவிக்க முடியுமானால், அவன் தான் உண்மையான நண்பனாக இருக்க முடியும். ஏனெனில், அவ்வளவு கேவலமாக மனதில் எண்ணங்கள் தோன்றும்.

இம் மூன்று இலக்கணங்களுடன் நண்பர்கள் கிடைக்கப் பெற்றால் உண்மையிலேயே அவர் வாழ்க்கை நன்றாக இருக்கும் என கூறலாம். ஏனெனில், வாழ்வில் ஏற்படும் எத்தனை பெரிய துன்பமும் கூட நட்பின் துணையால் ஒன்றுமில்லாமல் ஆகிவிடும். மேலும், சிறிய இன்பமும் நட்பின் துணையால் மிகப்பெரிதாகிவிடும். நட்பின் வலிமை அத்தகையது.

சேகர் : நீ கூறுவது அனைத்தும் உண்மையே ஆனால், அத்தகைய ஓர் உண்மையான நண்பன் கிடைக்கமாட்டான் என்றே தோன்றுகிறது.

ராம் : திருமணமான என்னுடைய நண்பர்கள் தங்களின் மனைவியால் தங்கள் திருமண வாழ்க்கை சோகமாகிவிட்டது என கூறும் போது, நான் அவர்களிடம் நட்பின் இலக்கணத்தை எடுத்துக் கூறி, நீ உன் மனைவியை, நட்புடன் அணுகுமாறு கூறுவதுண்டு. அப்போது உடனடியாக அவர்கள் கூறும் பதில், “நான் கண்டிப்பாக நட்பின் இலக்கணமாக நீ கூறுகிற மூன்று குணங்களை வளர்த்துக் கொள்வேன். ஆனால் நிச்சயமாக என் மனைவியால் இக்குணங்களை வளர்த்துக் கொள்ள முடியாது. எனவே மனைவியிடம் நட்பாக வாழ முடியாது ” என கூறுவர்.

அப்போது நான் அவர்களிடம், முக்குணத்தில் முதன்மையாக நான் குறிப்பிட்டதே எதிர்பார்ப்பு இல்லாமை என்றுதான். ஆனால், நீ உடனடியாக உன் மனைவி அந்த மூன்று குணங்களை வளர்க்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறாயே தவிர, நீ முதலில் அத்தகைய நட்பிற்கு தகுதியாக்கிக் கொள்ளவில்லையே என கூறிய பிறகுதான் அவர்களின் தவறை உணர்வார்கள்.

இதே போன்று நாமெல்லாம் உண்மை நட்பிற்கு ஆசைப்படுகிறோமே தவிர, அத்தகைய நட்பை பெறுவதற்கு முதலில், நம்மை நாம் தகுதியாக்கிக் கொள்வதில்லை. அதனாலேயே நமக்கு இத்தகைய நட்பு கிடைப்பதும் இல்லை.

சேகர் : நான் ஒப்புக் கொள்கிறேன். நீ கூறுவது போல் உண்மையான நட்பில் இத்தனை நன்மைகள் இருப்பதை உணர்ந்தால் கூட, எதற்காக நம்முடைய மனம் இந்த மூன்று குணங்களை வளர்த்துக் கொள்ள தயங்குகிறது

ராம் : அறியாமை தான். வேறு என்ன சொல்வது ?. அறியாமை நம்மிடம்

மட்டுமல்ல ஓட்டு மொத்த சமுதாயமும் அறியாமையில் உள்ளது. சிறுவயது முதல் அப்படியே பழக்கப்பட்டு விட்டதால், இந்த குணங்களை வளர்ப்பதற்கு நமக்கு சிரமமாக இருக்கிறது.

அதாவது, நாம் ஒவ்வொருவரும் அடியில் ஓட்டை உள்ள வெறும் குடமாக உள்ளோமே தவிர, நிறைகுடமாக இருப்பதில்லை. அதனாலேயே, நாம் வாங்கும் நிலையிலேயே உள்ளோம். கொடுக்கும் நிலைக்கு வருவதே இல்லை. எனவே ஓட்டைக் குடமாக வாழ்வதில் சுகமில்லை என அறிவாற்றலால் புரிந்து செயல்பட வேண்டும்.

ஏனென்றால், நீ நிறைகுடமாக (எதிர்பார்ப்பு இல்லாதவனாக, இருந்தால்தான் உன் மனைவி வெற்றுகுடமாக (உன்னிடம் அன்பை எதிர்பார்த்து) இருந்தாலும் உன்னால் அவளை திருப்திப்படுத்த முடியும். இல்லையென்றால், நீ அவளிடம் அன்பை எதிர்பார்த்தும் அவள் உன்னிடம் அன்பை எதிர்பார்த்தும் இருந்தால், இரண்டு பிச்சைக்காரர்கள் ஒருவருக்கொருவர் பிச்சை கேட்டால் ஒரு பயனும் இல்லாதது போல் உன் வாழ்க்கை ஆகிவிடும்.

நமது முட்டாள்தனத்தை ஒப்புக்கொண்டு, நம்மை நாமே அறிவாளி என நினைப்பதை விடுத்து, உண்மையான அறிவைப் பயன்படுத்தி, தீவிரமாக சிந்தித்தால், மிக சுலபமாக இக் குணங்களை வளர்த்துக் கொள்ளலாம். இதற்கு இயற்கையிலேயே இறைவன் நம் ஒவ்வொருவருக்கும் கொடுத்துள்ள ஞானம் என்ற ஆயுதத்தைத் தவிர, வேறு பணபலத்தாலோ, உடல் பலத்தாலோ, வேறு எந்த வகையிலோ நட்பின் வலிமையைப் பெற முடியாது. எனவே, ஞானத்தால் மட்டுமே இக்குணங்களை வளர்ப்பது சுலபம் என்று தெரிகிறது.

எனவே, திருமணத்திற்கு முன் இம் மூன்று குணங்களையும் வளர்த்துக் கொண்டு, பிறகு திருமணம் செய்தால் அவர்களின் திருமண வாழ்க்கை சுகமாக இருக்கும் என்று சொல்லவும் வேண்டுமா ?

ஞானதேவர் என்கின்ற ஞானி, தனது கீதை விளக்க உரையான ஞானேச்சுவரியில், அறிவாளிகள் தங்கள் வாழ்க்கையில் எத்தகைய மனப்பான்மை கொண்டிருப்பார்கள் என்றும் அறிவில்லாதவர்கள் இவ்விசயத்தில் எத்தகைய மனப்பான்மை கொண்டிருப்பார்கள் என்பதையும் தனித்தனியாக விளக்கி உள்ளார்.

<u>அவை வருமாறு:</u>

அறிவாளிகளின் மனப்பான்மை : "தன் தேகத்தின் விசயத்தில், சாவடியில் சற்று நேரம் இளைப்பாற தங்குகிற வழிப்போக்கன் போல், பற்றற்றவனாயும்,

ஒரு வழிப்போக்கன் தான் சற்று நேரம் தங்கி இருக்கும் மரத்தின் நிழலில் எவ்வளவு பற்று உள்ளவனாக இருப்பானோ, அவ்வளவு பற்று கூட தன் வீட்டின் (சொத்தின்) விசயத்தில் வைக்காதவனாய்,

தன்னோடு கூடவே வந்து கொண்டு இருக்கும் தன் நிழலில், ஒருவன் எப்படி கவனம் அற்றவனாக இருப்பானோ, அப்படியே, தன் ஸ்திரி

(மனைவி) விசயத்தில் ஆசை என்பது அற்றுப்போய், கவனம் அற்றவனாகவும்,

தன் அடியில் வெயிலுக்காக ஒதுங்கிய வழிப்போக்கன் விசயத்திலும், கால்நடைகள் விசயத்திலும், ஒரு மரம் எவ்வளவு பற்றற்றதாக இருக்குமோ, தனக்கு பிறந்த குழந்தைகள் விசயத்தில் அவ்வளவு பற்று அற்றவனாகவும்,

நடந்து போகும் ஒருவன் வழியில் இருக்கும் பொருட்களை பார்த்துக் கொண்டே போவது போல், உற்றார் உறவினர்களால் சூழப்பட்டு இருக்கும் போது அவர்களிடத்தில் பற்று வைக்காதவனாகவும், எவன் இருப்பானோ அவனே ஞானத்திற்கு பிறப்பிடம் என்று அறிந்து கொள்ள" எனக் கூறுகிறார்.

அறிவில்லாதவர்களின்மனப்பான்மை : புதிதாய் பூத்து பரிமளம் வீசிக்கொண்டு இருக்கும் தாமரைப் பூவின் மேல், ஆசை கொள்ளும் தேனீயைப் போல், தன் வீட்டின் (சொத்தின் மேல்) மேல் அதிக ஆசை வைத்து அதில் சிக்கிப் போனவனாக, வெல்ல உருண்டையின் மேல் உட்கார்ந்து அதை விட்டு எழாத ஈயைப் போல், ஸ்த்ரியின் (பெண்ணின்) மேல், ஆசை உள்ளவனாக,

சளி, கோழை இவற்றை விட்டு வெளியேறாத கொசுவைப் போல, சேற்றில் புதைந்து போய், அதில் சிக்கிக் கிடக்கும் எருமை மாட்டைப் போல், மனதால் பெண் மேல் உள்ள மோகத்தை விடமுடியாது இருப்பவனாக,

தேனின் ருசிக்கு ஆசைப்பட்டு, ஓய்வே இல்லாமல் உழைத்துக் கொண்டிருக்கும் தேனீயைப் போல், தன் குடும்பத்தை காப்பாற்றுவதற்கே இரவுபகலாக கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கின்றவனாக,

பெண்ணத் தவிர வேற ஒன்றையும் நினையாதபடி தன் உயிர் முழுவதையும் பெண் தேகத்தின் மேல் வைத்துவிட்டு, தன் சொரூபம் இன்னது என்றும், தான் செய்ய வேண்டியது இன்னது என்றும் முற்றிலும் அறியாதவனாக,

லாப, நஷ்டங்களை விசாரிக்காமலும், மான அவமானங்களை கவனிக்காமலும், தெய்வசிந்தை காதில் ஏறாமலும் தன் இந்திரியங்கள் அனைத்தையும் ஒரே விதமாக பெண்ணை நோக்கச் செய்தவனாக,

சித்தம் (மனசு), பெண்ணுக்கே பூஜை செய்து கொண்டு, குரங்கு ஆட்டியின் குரங்கு போல் பெண் இஷ்டப்படி எல்லாம் ஆடிக் கொண்டு இருப்பவனாக,

தான் விரும்பும் பெண்ணை எவனாவது வக்ர திருஷ்டியால் பார்த்தாலோ, அவளுக்கு விரோதமாய் நடந்து கொண்டாலோ யுக பிரளயமே ஏற்பட்டதாக நினைக்கின்றவனாக, எவன் இருப்பானோ அவனே அறிவீனத்துக்கு வேர் என்றும் அவனால் அறியாமை வலிமை பெறுகிறது என்றும் சொல்வது கூட போதாது. அவன் ஒரு மூர்த்திகரித்த மூடனே ஆவான்.
இவ்வாறு ஞானதேவர் கூறுகிறார்

சேகர் : அது சரி, நீ கூறிய இம் மூன்று குணங்களுடன் கூடியவன் திருமணத்திற்கு ஆசைப்படுவானா ?

ராம் : அவன் ஒருவனிடம் மட்டும் நட்புடன் வாழ்வதாலேயே இவ்வளவு வலிமை என உணர்ந்துள்ளதால், அவன் உலகலாவிய நட்பை எறும்பு முதல் யானை வரை அனைத்துடன் இந்நட்பை வளர்த்து அவன் இறை பலத்தை பெற்றுவிடுவதற்கே ஆசைப்படுவான்.

சேகர் : சரி, நீ கூறுவது போல் உலகளாவிய சுரேஷ் மற்றும் நட்பை வளர்த்துக் கொள்ள விரும்புகிறேன். இருப்பினும், இக் காமம் அதற்கு தடையாக உள்ளதால், அதை அடக்குவதற்கு அல்லது அழிப்பதற்கு உண்டான பயிற்சிகளைக் கூறினால் எங்களுக்கு உபயோகமாக இருக்கும்.

ராம் : ஒன்றை நீ நன்றாக புரிந்து கொள்ள வேண்டும். நீ உன் மனதை அடக்க முயற்சித்தால் அது இரண்டு மடங்கு வேகத்துடன் உன்னை தாக்கும். அதே போல் காமசக்தியை அழிக்கவும் முடியாது. நீ படித்திருப்பாய், ஆற்றலை (சக்தியை) ஆக்கவோ அழிக்கவோ முடியாது என்று. அதனால், முதலில் காமத்தை (மற்ற எந்த எண்ணத்தையும்) அடக்க முயற்சி செய்வதை விட்டுவிட்டு அதை புரிந்து கொள்ள வேண்டும்.

இதுவரை காமம் மற்றும் திருமணத்தைப் பற்றி தெரிந்து கொண்டதை நன்கு புரிந்து கொள்ள வேண்டும். ஏனெனில், புரிதல் என்பது உனக்குள் இருந்துதான் வரமுடியுமே தவிர வெளியில் இருந்து எவரும் புரிய வைக்க முடியாது. வெளியில் இருந்து ஞானிகள் நமக்கு தெரிவிக்கலாம். புரிந்து கொள்வது நம் கையில்தான் உள்ளது. புரிந்து கொள்வதற்கு தெரிந்து கொண்டதை மனம் ஆராய்ச்சி செய்ய வேண்டும். மீண்டும் மீண்டும் இதைப் பற்றி சிந்தித்து, ஆராய்ச்சி செய்ய வேண்டும். புரிந்து கொண்டால் வெகு சுலபமாக அனுபவத்துக்கு கொண்டு வரலாம்.

சிகரெட் குடிப்பது தவறு என்று எல்லோருக்கும் தெரியும். ஆனால் புரிந்து கொண்டவர்கள் மட்டுமே, அப்பழக்கத்துக்கு அடிமையாகாமல் இருக்க முடியும்.

காமசக்தியை அழிக்க முடியாது என்றாலும் அதை மாற்ற முடியும் **(Energy can neither be created nor be destroyed but it can be transformed from one form into another form - Law of Conservation of Energy)**

இதையே திருமூலர் –
அஞ்சும் அடக்கு அடக்கு என்பர் அறிவிலார்
அஞ்சும் அடக்கும் அமரரும் அங்கில்லை
அஞ்சும் அடக்கில் அசேதனமாம் என்றிட்டு
அஞ்சும் அடக்கா அறிவு அறிந்தேனே

வித்துக்குற்று உண்பான் விளைவு அறியாதவன்
வித்துக்குற்று உண்ணாமல் வித்துச்சுட்டுஉண்பவன்
வித்துக்குற்று உண்பானில் வேறு அலன் ஈற்றவன்
வித்துக்குற்று உண்ணாமல் வித்துவித்தான் அன்றே

அதற்கான பயிற்சியை எனக்கு தெரிந்த அளவு சுருக்கமாக சொல்கிறேன்.

1. விந்தினை வெளிவிட்டு, காமசக்தியை வீணாக்காமல் மேல் நோக்கி செலுத்துவதற்கு சில ஹடயோக பயிற்சிகளில் தேர்ச்சி பெற வேண்டும்.

2. முறையாக பச்சமொட்டி ஆசனம், சலபா ஆசனம், வஜ்ரா ஆசனம், சுப்த வஜ்ரா ஆசனம், சிரஸ் ஆசனம், சர்வாங்க ஆசனம் மற்றும் சித்த ஆசனத்தில் தேர்ச்சி பெற வேண்டும். பின்,

3. சாம்பவி முத்ராவில் தேர்ச்சி பெற வேண்டும்.

4. பின் வஜ்ரோலி முத்ரா, மூல பந்தா, உட்டியான பந்தா ஆகியவற்றை பகிர் கும்பகாவில் பயிற்சி செய்ய வேண்டும். மேற்கண்ட பயிற்சிகளில் முதலில் நன்றாக தேர்ச்சி பெற வேண்டும்.

5. அடுத்ததாக தினமும் காலையில் 4 மணிக்கு எழுந்து காலைக் கடன்களை (இயற்கை எனிமா மூலம்) முடித்து ஹடயோக பயிற்சிகளை முடித்து விட்டு சித்த ஆசனத்தில் அமர்ந்து குறைந்தது அரை மணி நேரம் தியானம் செய்ய வேண்டும்.

தியானம் எப்படி செய்ய வேண்டும் என்றால், உன்னை மயக்கும் பெண் உருவை மனக்கண்ணில் நிர்வாணமாக நிறுத்தி, அவளுடைய 9 ஓட்டைகளிலும் கழிவு ஒழுகுமாறு பாவனை பண்ண வேண்டும். அவ்வாறு வழிந்து கொண்டு இருக்கும் அவ்வுருவத்தை நீ தொடுவதாக பாவனை செய்ய வேண்டும். அவ்வாறு அருகில் செல்லும் போது உனக்கு உண்மையில் வாந்தி வரும் அளவிற்கு பாவனை பலமாக இருக்க வேண்டும். பின் சதையை கிழித்து, வரும் சீழை நக்குவதற்கு, உன் மனதுக்கு ஆணையிட வேண்டும். இதைத்தான் நீ விரும்பினாய் இப்பொழுது நக்கு இதுதான் தோளின் உள்ளே இருந்தது என்று மனத்துக் சொல்ல வேண்டும். பின் எலும்புக் கூட்டைப் பார்த்து, மனதுக்கு அதை ரசிப்பதற்கு ஆணையிட வேண்டும். பின் அவள் வயிற்றுக்குள் இருக்கும் மலத்தை நீ தொடுவதாக பாவனை செய்ய வேண்டும். அவளை எமனாக நினைத்து உன் சக்தியை உறிஞ்சுவதாக பாவனை செய்ய வேண்டும்.

பின் அவளும் சக்தி நானும் சக்தி. பின் இவளை மோகிக்க என்ன இருக்கிறது என்று மனதுக்கு புரிய வைக்க வேண்டும்.

நம்மை நாம் ரசித்துக் கொள்வதற்கு கண்ணாடி பயன்படுவது போல் எதிரில் பெண் உருவில் தோன்றும் என்னுள் இருக்கும் சக்தியை நான் ரசிக்கலாமே தவிர, மோகிப்பதற்கோ இனி அடைவதற்க்கோ ஒன்றுமே இல்லை என்று புரிய வைக்க வேண்டும்.

இன்னும் பல வழிகளில் உனக்கு தோன்றியபடி உண்மை நிலையை பாவனை செய்ய வேண்டும். எந்த எந்த பெண் உன்னை மோகிக்க வைக்கிறாளோ எல்லோரையும் இப்படியே தினமும் தியானம் செய்ய

வேண்டும்.
இதையே பதஞ்சலி யோக சூத்திரத்தில் சாதன பாதம் 33 சுலோகம் ,

“பிரதிபந்தமான எண்ணங்கள் வரும்போது அவைகட்கு நேர்மாறன எண்ணங்களை வருவிக்க வேண்டும்” என கூறுகிறது.

திருமூலர் பாடல்

மாதரை மாயவரும் கூற்றம் என்று உன்னக்
காதல் அதாகிய காமம் கழிந்திடும்
சாதலும் இல்லை சதகோடி ஆண்டினும்
சோதியின் உள்ளே துரிசுஅறும் காலமே

பின் அப்பெண்களை நேரில் பார்க்கும் போது மோகத்துக்குப் பதில் நீ அவளை பற்றி தியானம் செய்த முறையில் பார்ப்பாய். அதனால், உனக்கு மோகம் ஏற்படாது, உனக்குள் இருக்கும் காமத்தின் அளவுக்கு ஏற்ப அதை மாற்றுவதற்கு சில வருடங்கள் வரை விடாமல் தொடர்ந்து பயிற்சி செயது வர வேண்டும்.

6, பின் எப்போதெல்லாம் உனது மனது காமத்தால் உந்தப்பட்டு உன்னுடைய ஆண்குறி எழுச்சி பெறுகிறதோ, உடனே நீ சாம்பவி முத்ராவில் மூச்சை வெளிநிறுத்தி வஜ்ரோலி, உட்டியானா மற்றும் மூலபந்தாவுடன் சேர்த்து ஒரே நேரத்தில் செய்ய வேண்டும். முடிந்தால் அந்த நேரத்தில் மூலாதாரத்தில் இருந்து, சக்தி மேல் நோக்கி தலை உச்சி வரை போவதாக பாவனை செய்ய வேண்டும். முதலில் கொஞ்சம் சிரமமாக இருந்தாலும், பின் இப்பயிற்சி சுலபமாக, சுகமாக இருக்கும். இதுவே போகத்தை யோகமாக மாற்றும்முறை. காம உணர்வு எனக்கு மீண்டும் மீண்டும் வருகிறதே என குற்ற உணர்வு கொள்ளாமல், மேற்கூறிய பயிற்சியில் முழு கவனம் செலுத்தினால் போதும், பின் நாளடையில் காமசக்தி ஆன்ம சக்தியாக மாறும்.

7, உணவு பழக்கவழக்கங்களில் அதிக காரம், உப்பு, புளிப்பு தவிர்த்து சாத்வீக உணவு வகைகளை எடுத்துக் கொள்ள வேண்டும்.

8, பகவத்கீதை, ஞானேச்சுவரி, சித்தர் பாடல்கள் ஆகிய புத்தகங்களை நேரம் கிடைக்கும் போதெல்லாம் படித்து ஆராய்ச்சி செய்ய வேண்டும்.

பயிற்சிக்கான கால அட்டவணை:

காலை 4 மணிக்கு எழுந்திருத்தல்
காலைக்கடன்

| | |
|---|---|
| (எனிமா உட்பட) | - ½ மணிநேரம் |
| சூரிய நமஸ்காரம் | - **2–3** சுற்று |
| சவா சனம் | - 2 நிமிடம் |
| சர்வாங்க ஆசனம் | - 7 நிமிடம் |
| ஹலா ஆசனம் | - 3 நிமிடம் |

| | |
|---|---|
| சவா ஆசனம் | - 2 நிமிடம் |
| சுப்த வஜ்ரா ஆசனம் | - 5 நிமிடம் |
| பச்சிமொட்டி ஆசனம் | - 3 நிமிடம் |
| சவா ஆசனம் | - 3 நிமிடம் |
| சிரஸ் ஆசனம் | - 5 நிமிடம் |
| மூலபந்தா | - 12 தடவை |
| உட்டியானா பந்தா | - 6 தடவை |
| வஜ்ரோலி முத்ரா | - 12 தடவை |
| பகீர் கும்பகாலில், மூலபந்தா<br>உட்டியானா பந்தா,<br>வஜ்ரோலி முத்ரா, | - 6 தடவை |
| சாம்பவி முத்ராவில் சித்தாசனம்<br>வஜ்ர ஆசனத்தில் தியானம் | - 30 நிமிடம் |

<u>குறிப்பு</u>

பெரும்பாலும் ஆண்கள் பெண்கள் மேல் மோகம் கொள்வது வெளிப்படையாகவும், தீவிரத்தன்மையுடனும் உள்ளதால் ஆண்–பெண் என்ற கருத்தில் இக்கட்டுரை அமைந்துள்ளது. இதையே பெண் ஆணின் மீது கொள்ளும் மோகத்திற்கும் பொருத்திக் கொள்ளலாம்.

உங்களது விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன.

= = = = =